 

## சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை

# சுற்றுலா

## மானியக் கோரிக்கை எண். 29

அறிவிப்புகள்
2021–2022

# சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை

# சுற்றுலா

### மானியக் கோரிக்கை எண். 29

## அறிவிப்புகள்

## 2021 – 2022


## டாக்டர் மா. மதிவேந்தன்

### சுற்றுலாத் துறை அமைச்சர்



©

தமிழ்நாடு அரசு

2021

**1. கன்னியாகுமரியில் உள்ள அய்யன் திருவள்ளுவர் சிலையை இரவிலும் கண்டு மகிழும் வகையில் லேசர் தொழில்நுட்ப உதவியுடன் ஒளியூட்டப்படும்.**

கன்னியாகுமரியில் அமைந்துள்ள 133 அடி அய்யன் திருவள்ளுவர் சிலையை மேலும் அழகூட்டும் வகையில் சுற்றுலாப் பயணிகள் இரவிலும் கண்டு மகிழ லேசர் தொழில்நுட்ப உதவியுடன் முப்பரிமாண ஒளியூட்டம் அமைக்கப்படும்.

**2. தமிழ் பண்பாடு மற்றும் பாரம்பரிய சின்னமாக விளங்கிய துறைமுக நகரமான பூம்புகார் புனரமைக்கப்படும்.**

தமிழின் முதல் காப்பியமான சிலப்பதிகாரத்தின் சரித்திரம் பேசும் துறைமுக நகரமான பூம்புகார் சுற்றுலாப் பயணிகளை கவரும் விதத்தில் புனரமைக்கப்படும். இதன் மூலம் நெடுங்கல் மன்றம், இலஞ்சி மன்றம், பாவை மன்றம், சிலப்பதிகாரக் கலைக் கூடம் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கான அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும்.



**3. தமிழ்நாட்டில் உள்ள 300 சுற்றுலாத் தலங்களில் சர்வதேசத் தரத்திற்கு இணையான வசதிகளை ஏற்படுத்த சுற்றுலா பெருந்திட்டம் (Master Plan) தயாரிக்கப்படும்.**

தமிழ்நாடு சுற்றுலாத் துறையின் தனித்துவத்தை நிலைப்படுத்துதல், சுற்றுலாத் தலங்களில் பல்வேறு வசதிகளை ஏற்படுத்துதல், கூடுதல் தங்கும் இடங்கள் உருவாக்குதல், சுற்றுலாப் பயணிகளின் தங்கும் காலத்தினை அதிகரித்தல், அந்நிய செலாவணியை அதிகம் ஈட்டுதல், தனியார் மற்றும் அந்நிய முதலீட்டை ஊக்குவித்தல் மற்றும் பல்வேறு வகையான சுற்றுலாக்களை மேம்படுத்துதல் ஆகிய காரணிகளை உள்ளடக்கிய சுற்றுலா பெருந்திட்டம் (**Master Plan for Tourism**) தயாரிக்கப்படும்.

**6. கொல்லிமலை பல்வேறு வசதிகளுடன் கூடிய முக்கிய சுற்றுலாத் தலமாக மேம்படுத்தப்படும்.**

நாமக்கல் மாவட்டத்தில் அமைந்துள்ள கொல்லிமலை அதிக கொண்டை ஊசி வளைவுகளை கொண்ட ஒரு மலைவாசஸ்தலமாகும். இங்குள்ள இயற்கை எழில் காட்சிகளை காண்பதற்கும், நீர்வீழ்ச்சியில் குளிப்பதற்கும் சுற்றுலாப் பயணிகள் அதிகம் வருகை தருகின்றனர்.

இத்தகைய சிறப்புமிக்க கொல்லிமலையில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தொடங்கி 50 ஆண்டுகள் நிறைவுபெற்று பொன்விழா கொண்டாடும் வகையில் சுற்றுச்சூழலுடன் கூடிய தங்கும் இடங்கள் (Eco Resorts) மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய சாகச விளையாட்டுகள் ஏற்படுத்தப்படும்.



**7. தமிழ்நாட்டின் சுற்றுலா இடங்களை மேம்படுத்த, "சுற்றுலாத் தலங்கள் வளர்ச்சித் திட்டம்" (Tourism Destination Development Scheme) உருவாக்கப்படும்.**

தமிழ்நாட்டின் சுற்றுலா இடங்களை மேம்படுத்தும் வகையில், நினைவுச் சின்னங்களை ஒளியூட்டுதல், நிலச்சீரமைப்பு, ஒலி-ஒளி காட்சி அமைத்தல், பாரம்பரியச் சின்னங்கள் புனரமைத்தல், நீர்வீழ்ச்சியின் அழகினை கண்டு ரசிக்க பார்வையாளர் மாடம் மற்றும் கூடுதல் வசதிகளை ஒருங்கிணைத்து மேம்படுத்தும் விதமாக, சுற்றுலாத் தலங்கள் வளர்ச்சித் திட்டம் (Tourism Destination Development Scheme) உருவாக்கப்படும்.

**8. தமிழ்நாட்டின் முக்கிய சுற்றுலா தலங்களை இணைக்கும் விதமாக மதுரை, கொடைக்கானல் மற்றும் இராமேஸ்வரம் ஆகிய இடங்களில் ஹெலிகாப்டர் சுற்றுலா தொடங்க ரூபாய் 1.00 கோடி மதிப்பீட்டில் ஹெலிகாப்டர் இறங்குதளம் (Helipad) அமைக்கப்படும்.**

மதுரை, கொடைக்கானல் மற்றும் இராமேஸ்வரத்தில் ஏராளமான கோயில்களும், சுற்றுலாத்தலங்களும் உள்ளன. இவ்விடங்களுக்கு செல்லும் சுற்றுலாப் பயணிகளை கவர்வதற்கும், அவர்களின் பயண நேரத்தை குறைப்பதற்கும் இராமேஸ்வரம், மதுரை, கொடைக்கானல் இடையே ஹெலிகாப்டர் சுற்றுலா தொடங்க ரூபாய் 1.00 கோடி மதிப்பீட்டில் ஹெலிகாப்டர் இறங்குதளம் (Helipad) அமைக்கப்படும்.



**9. தமிழ்நாட்டில் மலைவாழிடங்கள், வனப்பகுதிகள் மற்றும் கடற்கரை பகுதிகளில் சாகச சுற்றுலா இடங்கள் மற்றும் சுற்றுச் சூழல் திறந்தவெளி முகாம்கள் (Adventure and Eco Camping Sites) ஏற்படுத்தப்படும்.**

இளைஞர்களிடையே சாகச சுற்றுலாக்கள் அதிக வரவேற்பை பெற்றுள்ளன. மேலும், இவர்கள் திறந்தவெளி முகாம்களில் தங்கிச்செல்லவும் ஆர்வம் காட்டுகின்றனர். இதனை ஊக்குவிக்கும் பொருட்டு அதிகம் சாத்தியக்கூறுகள் உள்ள 10 இடங்கள் தேர்வு செய்து, சாகச சுற்றுலா மற்றும் சுற்றுச்சூழல் திறந்தவெளி முகாம்கள் (Adventure and Eco Camping Sites) ஏற்படுத்தப்படும்.

## 10. முட்டுக்காடு படகு இல்லத்தில் மிதவை படகுடன் கூடிய உணவகம் (Floating Restaurant) அமைக்கப்படும்.

முட்டுக்காட்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் படகு இல்லம் அமைந்துள்ளது. இப்படகு குழாமில் பல்வேறு வகையான படகுகள், வாட்டர் ஸ்கூட்டர்கள் மற்றும் விரைவுப் படகுகள் சுற்றுலாப் பயணிகள் பயணம் செய்வதற்காக உள்ளன.

இங்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளை மேலும் ஊக்குவிக்கும் வகையில் படகில் பயணித்து இயற்கை அழகினை ரசிப்பதற்காக தமிழ்நாட்டில் முதல் முறையாக மிதவை படகுடன் கூடிய உணவகம் (Floating Restaurant) அமைக்கப்படும்.



## 11. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தங்கும் விடுதிகளை இணையதள பயண நிறுவனங்களின் (Online Travel Aggregators) இணையதளத்தில் இடம்பெற செய்து பிரபலபடுத்தி, வருவாயை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தங்கும் விடுதிகளின் முன்பதிவுகள் முன்னணி இணையதள பயண நிறுவனங்களான MAKE MY TRIP, YATRA, GOIBIBO போன்ற நிறுவனங்களின் இணையதளத்தில் (Online Travel Aggregators) இடம்பெற செய்து அதிக வருவாய் ஈட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**12. தருமபுரி மாவட்டத்தில் ஒகேனக்கல் சுற்றுலாத் தலம் பல்வேறு வசதிகளுடன் மேம்படுத்தப்படும்.**

ஒகேனக்கல் நீர்வீழ்ச்சிக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக நீர்வீழ்ச்சியின் அழகை கண்டு ரசிக்க பார்வையாளர் மாடம், நடைபாதை, பரிசல் நிறுத்துமிடம், எண்ணெய் குளியலுக்கான இடங்கள், சமையலறைக் கூடம், உடைமாற்றும் அறை போன்ற பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படும்.



**13. ஜவ்வாது மலைப்பகுதியை பல்வேறு வசதிகளுடன் கூடிய சுற்றுலாத் தலமாக மேம்படுத்தப்படும்.**

இயற்கை எழில் கொஞ்சும் நீரோடைகள், அருவிகள் உள்ள ஜவ்வாது மலையில் சுற்றுச்சூழலுடன் கூடிய தங்கும் இடங்கள் (Eco Camping sites), பூங்காக்கள், பல்வேறு சாகச விளையாட்டுகளை ஏற்படுத்துதல், பீமா நீர்வீழ்ச்சி பகுதியை மேம்படுத்துதல், ஜமுனாமரத்தூர் ஏரியில் புதிய படகுக் குழாம் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.

## 14. இராமேஸ்வரம் கூடுதல் வசதிகளுடன் சிறந்த சுற்றுலாத் தலமாக மேம்படுத்தப்படும்.

இராமேஸ்வரம் ஒரு புனித நகரமாகும். இந்நகரத்திற்கு வருகைத் தரும் யாத்திரிகர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக வழிகாட்டி பலகைகள், படித்துறை விரிவாக்கம், நடைபாதை அமைத்தல், ஒருங்கிணைந்த வாகனம் நிறுத்துமிடம், பாரம்பரிய சின்னங்களை ஒளியூட்டுதல், பார்வையாளர் மாடம் அமைத்தல், பறவைகள் சரணாலயப் பகுதி, கோதண்டராமர் கோயில், இராமர் பாதம் போன்ற இடங்களை மேம்படுத்துதல் மற்றும் ஹெலிகாப்டர் இறங்குதளம் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.



## 15. ஏலகிரியில் சாகச சுற்றுலா பல்வேறு பிரிவுகளுடன் மேம்படுத்தப்படும்.

சாகச சுற்றுலா பிரிவுகளை அமைப்பதற்கு உகந்த தலமாக ஏலகிரி மலையின் உயரமும், அமைப்பும் அமைந்துள்ளது. எனவே, இளம்வயது சுற்றுலாப் பயணிகளை கவரும் விதத்தில் சாகச சுற்றுலாவின் பிரிவான பாராகிளைடிங் (Paragliding), Zip lining, Bungee slingshot, மலையேற்றம் (Rock climbing) மற்றும் இயற்கை வழி நடைப்பயணம் (Nature walks), திறந்தவெளி முகாம்கள் (Camping sites) போன்ற சுற்றுலா வசதிகள் ஏலகிரி மலையில் ஏற்படுத்தப்படும்.

**16. சொகுசு கப்பல் சேவை மற்றும் படகு சேவையை சுற்றுலா நகரங்களுக்கிடையே அறிமுகப்படுத்த சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்படும்.**

சுற்றுலாப் பயணிகள் பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்களுடன் கடற்பகுதியில் குறைந்த கால அளவில் பயணம் மேற்கொள்வது சொகுசு படகு பயணச் சுற்றுலா ஆகும். இத்தகைய சுற்றுலாக்கள் வெளிநாடுகளில் மிகவும் வரவேற்பை பெற்றுள்ளவை. இவ்வகையில் உள்நாடு மற்றும் வெளிநாடு சுற்றுலாப் பயணிகள் அதிகம் வருகைதரும் நகரங்களான இராமேஸ்வரம் மற்றும் கன்னியாகுமரிக்கிடையே சொகுசு கப்பல் சேவை மற்றும் படகு சேவை தொடங்குவதற்கான சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்படும்.



**17. பிச்சாவரம் சுற்றுலாத் தலம் கூடுதல் வசதிகளுடன் மேம்படுத்தப்படும்.**

பிச்சாவரத்தில் அமைந்துள்ள அலையாத்திக் காடுகளை (Mangrove Forest) காண்பதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் வருகை தருகின்றனர். மேலும், இச்சுற்றுலாப் பயணிகளுக்கு கூடுதல் வசதிகள் செய்துதரும் வகையில் பூங்கா, திறந்தவெளி முகாம், காட்சி கோபுரம், படகு குழாம், தங்கும் அறைகள் மற்றும் உணவகம் போன்றவை பிச்சாவரம் படகு குழாம் பகுதியில் மேம்படுத்தப்படும்.

**18. முதலியார்குப்பம் படகு குழாம் மற்றும் அருகில் உள்ள தீவுப் பகுதியை கூடுதல் வசதிகளுடன் ரூபாய் 50.00 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

ஓடியூர் ஏரியில் அமைந்துள்ள தீவுப்பகுதிக்கு சுற்றுலாப் பயணிகள் படகில் சென்றுவர அனுமதிக்கப்படுகின்றனர். இத்தீவுப்பகுதி சுற்றுலாப் பயணிகளிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளதால், இங்கு நீர் விளையாட்டுகள் (Water Sports), கடற்கரை விளையாட்டுகள் (Beach play Activities), தேநீர் விடுதி போன்ற வசதிகளுடன் தங்கும் வசதி கொண்ட படகு இல்லம் ரூபாய் 50.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.



**19. கோயம்புத்தூர் மாவட்டம் உக்கடம் மற்றும் வாலாங்குளம் ஏரியில் புதிய படகு குழாம்கள் ஏற்படுத்தப்படும்.**

கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்களை ஏற்படுத்தும் விதமாக, உக்கடம் மற்றும் வாலாங்குளம் ஏரியில் படகு சவாரி மற்றும் இதர சுற்றுலா வசதிகளுடன் கூடிய புதிய படகு குழாம்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் ஏற்படுத்தப்படும்.

## 20. தமிழ்நாட்டில் உள்ள முக்கியமான மலைவாசஸ்தலங்கள், ஆன்மிகத் தலங்களில் கேபிள் கார் வசதியை ஏற்படுத்த சாத்தியக்கூறு ஆய்வு(Feasibility Study) மேற்கொள்ளப்படும்.

இயற்கை அழகினை கண்டு ரசிக்கவும், புதிய பயண அனுபவங்களை சுற்றுலாப் பயணிகள் பெறவும், சுற்றுச் சூழலுக்கு உகந்த கேபிள் கார் வசதி தமிழ்நாட்டில் உள்ள முக்கிய மலைவாசஸ்தலங்கள் மற்றும் ஆன்மிகத் தலங்களை இணைப்பதற்கான சாத்தியக்கூறு ஆய்வு (Feasibility Study) மேற்கொள்ளப்படும்.



## 21. சுற்றுலா விருந்தோம்பல் திறன் மேம்பாடு மற்றும் சான்றிதழ் திட்டம் தொடர்பான படிப்பு (Tourism Hospitality Skill Development and Certification Programme) அறிமுகப்படுத்தப்படும்.

சுற்றுலாத் தொழில் சார்ந்த துறையில் ஏராளமான வேலை வாய்ப்புகள் உள்ளன. இச்சிறந்த வாய்ப்பினை பயன்படுத்தி, உணவு தயாரிப்பு, தங்குமிட பராமரிப்பு, உணவு மற்றும் பானங்கள் பரிமாறுதல், வரவேற்பாளர் பகுதியில் திறன் மேம்படுத்துதல், உணவு தரக் கட்டுப்பாடு குறித்த பயிற்சிகள் வழங்குதல், சமையலர்களுக்கு பல்வேறு வகையான உணவு தயாரிப்பு முறைகளை பயிற்றுவித்தல் போன்றவைகளை உள்ளடக்கிய சுற்றுலா விருந்தோம்பல் திறன் மேம்பாடு மற்றும் சான்றிதழ் திட்டம் (Tourism Hospitality Skill Development and Certification Programme) தொடர்பான படிப்பு தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மூலம் அறிமுகப்படுத்தப்படும்.

## 22.சுற்றுலாத் துறை சார்ந்த தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் வகையில் சுற்றுலா விருது (Tourism Award) வழங்கப்படும்.

சுற்றுலாத் துறை வளர்ச்சிக்கு பெரும் பங்கு வகிக்கும் பயண மேலாண்மை நிறுவனங்கள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விமான நிறுவனங்கள், தங்கும் விடுதி உரிமையாளர்கள் (Hoteliers), பயண ஏற்பாட்டாளர்கள் (Inbound and Outbound Tour Operators), பணப் பரிமாற்ற நிறுவனங்கள் (Forex Companies), பயண முகவர்கள், உணவக உரிமையாளர்கள் போன்றோர்களை ஊக்குவிக்கும் வகையில் சுற்றுலா விருது வழங்கப்படும்.



## 23.சுற்றுலா மேம்பாடு மற்றும் வளர்ச்சிக்கான குழு அமைக்கப்படும்.

சுற்றுலாத் தலங்களின் வளர்ச்சி, பல்வேறு சுற்றுலாப் பிரிவுகளை ஊக்குவித்தல், துறைகளுக்கிடையே ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல், தனியார் பங்களிப்பினை ஊக்குவித்தல், சுற்றுலா தொடர்பான விழிப்புணர்வு மற்றும் ஆலோசனைகளை வழங்குதல் போன்ற நோக்கங்களுக்காக சுற்றுலா மேம்பாடு மற்றும் வளர்ச்சிக் குழு அமைக்கப்படும்.

**24. கடற்கரைகளுக்கு Blue flag அங்கீகாரத்தினை பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.**

உலகின் பாதுகாப்பான, தூய்மையான மற்றும் சுற்றுச்சூழலுக்கு இணக்கமான கடற்கரைகளுக்கு ஐக்கிய நாடுகளின் உலக சுற்றுலா அமைப்பால் வழங்கப்படும் Blue flag அங்கீகாரத்தினை பெறுவதற்கு, தமிழ்நாட்டின் முக்கிய கடற்கரைகளான மெரினா, கோவளம், மாமல்லபுரம், முதலியார்குப்பம், மனோரா, அரியமான், முட்டம் மற்றும் பல்வேறு கடற்கரைகள் தரம் உயர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



**25. கிராமிய மற்றும் மலை தோட்டப்பயிர் சுற்றுலா (Rural and Plantation Tourism) மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.**

காபி, தேயிலை, ரப்பர், நறுமண பொருட்கள் அதிக அளவில் விளையும் இடங்களான உதகமண்டலம், கொடைக்கானல், மேகமலை, கன்னியாகுமரியில் கிராமிய மற்றும் தோட்டப்பயிர் சுற்றுலா சுற்றுக்களை ஏற்படுத்துவதன் மூலம், இவ்விடங்களுக்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகள் பண்ணை தோட்டங்களில் உள்ள விவசாயிகளுடன் கலந்துரையாடுவதற்கும் பல்வேறு சுற்றுலா அனுபவங்களை பெறுவதற்கும் வாய்ப்பாகிறது. கிராமிய மற்றும் மலைத் தோட்டப்பயிர் சுற்றுலா (Rural and Plantation Tourism) உள்நாடு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடையே மிகுந்த வரவேற்பை பெற்று வருவதனால், இதற்கான வளமான இடங்களை கண்டறிந்து மேம்படுத்த வழிவகை செய்யப்படும்.

**26. தமிழ்நாட்டில் மருத்துவ சுற்றுலா (Medical Tourism) பல்வேறு சுற்றுலா தொழில் பங்குதாரர்களின் ஒத்துழைப்புடன் மேம்படுத்தப்படும்.**

ஆயுர்வேதம், யோகா, யுனானி, சித்தா, இயற்கை மருத்துவம் மற்றும் அலோபதி மருத்துவ சிகிச்சை முறைகளில் உலகத்தரத்திலான மருத்துவ சேவைகள் குறைந்த செலவில் தமிழ்நாட்டில் உள்ள மருத்துவமனைகள் வழங்குகின்றன. ஆயுஷ் (AYUSH) மருத்துவம் பிரபலமடைந்துள்ளதால் வெளிநாட்டினர் இம்மருத்துவ சேவைகளை பெறுவதற்கு அதிக அளவில் வருகை புரிகின்றனர். இவர்களிடையே பல்வேறு சுற்றுலா தொழில் பங்குதாரர்களின் ஒத்துழைப்புடன் மருத்துவ சுற்றுலா மேம்படுத்தப்படும்.



**27. நீர் விளையாட்டுகள், சாகச விளையாட்டுகள், தங்கும் வசதியுடன் கூடிய வாகன இயக்குபவர்கள் (Caravan Operators) மற்றும் திறந்தவெளி முகாம்கள் (Camping sites) நடத்துபவர்களுக்கான வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்படும்.**

தமிழ்நாட்டில் அமைந்துள்ள மலை வாழிடங்கள், ஏரிகள், கடற்கரைகள், பல்வேறு நீர், சாகச விளையாட்டுகள் மற்றும் திறந்தவெளி முகாம்கள் (Camping sites) நடத்துவதற்கும், தங்கும் வசதியுடன் கூடிய வாகன சுற்றுலாவிற்கும் (Caravan Tourism) இளைஞர்கள் மற்றும் பல்வேறு தரப்பினரிடையே மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளதனால், இதனை நடத்துபவர்களுக்குரிய தகுதிகள், பாதுகாப்பு, உரிமம் மற்றும் பதிவு செய்தல் ஆகிய காரணிகளை உள்ளடக்கிய வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்படும்.

## 28. சென்னை மெரினா கடற்கரையில் இராயல் மெட்ராஸ் யாட் கிளப் உடன் இணைந்து பொழுபோக்கு படகு சவாரி தொடங்கப்படும்.

உலகின் இரண்டாவது நீளமான மெரினா கடற்கரையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகம் மற்றும் இராயல் மெட்ராஸ் யாட் கிளப் (Royal Madras Yacht Club) இணைந்து wind sailing, மோட்டார் படகுகள், அதிவிரைவு படகுகள் மற்றும் பொழுதுபோக்கு படகு சவாரி தொடங்கப்படும்.



## 29. 75-வது சுதந்திரதின கொண்டாட்டங்களை முன்னிட்டு தமிழ்நாட்டில் உள்ள 75 சுற்றுலாத் தலங்கள் விளம்பரப்படுத்தப்படும்.

நாட்டின் பாரம்பரியம், கலாச்சாரம் மற்றும் சிறந்த சாதனைகளை நினைவுக் கூறும் வகையில், அதனை தற்போதைய தலைமுறையினர் அறிந்துகொள்ளும் விதமாக நாட்டின் 75-வது சுதந்திர தினம் “சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா” (Azadi Ka Amrit Mahotsav) என்ற பெயரில் 75 வாரக் கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றன. இதன் ஒரு பகுதியாக தமிழ்நாட்டில் உள்ள 75 சுற்றுலாத் தலங்களின் காணொளி (Video) தயாரிக்கப்பட்டு, சமூக மற்றும் மின்னணு ஊடகங்கள் (Social and Digital Media) மூலமாக விளம்பரப்படுத்தப்படும்.

**30. பொன்விழா கொண்டாடும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினை மறுசீரமைக்க திட்ட ஆலோசகரின் அறிக்கை பெறப்பட்டு நடைமுறைப் படுத்தப்படும்.**

தமிழ்நாட்டின் சுற்றுலா வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பொன்விழா ஆண்டில் ஓட்டல்கள், சுற்றுலா மற்றும் போக்குவரத்துப் பிரிவு, தொலைநோக்கி இல்லங்கள், படகு குழாம்கள் மற்றும் பிற செயல்பாடுகளின் தரத்தை மேம்படுத்தி அதிக இலாபம் ஈட்டும் வகையில் மறுசீரமைக்க திட்ட ஆலோசகரின் அறிக்கைப் பெறப்பட்டுநடைமுறைப்படுத்தப்படும்.

**டாக்டர் மா. மதிவேந்தன்**
சுற்றுலாத் துறை அமைச்சர்